# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### IIT மெட்ராஸ் ப்ரவார்டக் டெக்னோலொஜீஸ் பௌண்டேசன் பேராளர்களின் விஜயம்

ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பிற்கு வழிகோலும் செயற்பாடுகளை இந்திய உயர் ஸ்தானிகராலயம் முன்னெடுத்துவருகின்றது. இச்செயற்பாடுகளின் அங்கமாக IIT Madras, Pravartak Technologies Foundation நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர். M. J. சங்கர் ராமன் அவர்கள் தலைமையிலான அந்நிறுவன பேராளர்கள் குழுவினர் 2025 செப்டெம்பர் 22-23 வரை கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

2. IIT Pravartak தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையமானது தொழில்நுட்ப மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி, மனிதனை மையமாக கொண்ட AI செயற்பாடுகள், மற்றும் AI, IoT, மற்றும் தரவு விஞ்ஞானம் போன்ற துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பு போன்றவற்றில் கவனஞ்செலுத்தி வருகின்றது

3. இந்நிலையில் விஜயம் மேற்கொண்ட இப்பேராளர்கள் மாண்புமிகு இலங்கை பிரதமர், கௌரவ விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர், கௌரவ டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர், ஆகியோரையும் ஜனாதிபதியின் டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான பிரதம ஆலோசகர் அவர்களையும் சந்தித்திருந்தனர்.

4. கண்டுபிடிப்புகளுக்கான ஆரம்பநிலை மையங்களை உருவாக்குதல், கல்வி துறையில் வினைத்திறன் மிக்க வகையில் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தல் செயற்கை நுண்ணறிவு சார் திறன் விருத்தி, செயற்கை நுண்ணறிவு போன்ற தளங்களில் மனிதர்களை மையமாகக் கொண்ட செயன்முறைகளில் பணியாற்றல் போன்றவற்றில் ஒத்துழைப்பினை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

5. அத்துடன் இலங்கையின் AI துறைசார்ந்த நிபுணர்களுடனும் இக்குழுவினர் சந்திப்புகளை மேற்கொண்டதுடன் இச்சந்திப்புகளின்போது செயற்கை நுண்ணறிவுத் துறையில் பரஸ்பர ஒத்துழைப்புக்கான பல வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

6. மேலும் கல்வி மேம்பாடு, பயிற்சிகள், ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக IIT Madras Pravartak Technologies Foundation மற்றும்

களனிப் பல்கலைக் கழகம் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.

************

**கொழும்பு**
**24 செப்டெம்பர் 2025**